ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/10 - 2016 නොවැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2016.11.29

*1995/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பு**

2015, செத்தெம்பர் 01 ஆந் திகதிய 1930/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு பின்வரும் திருத்தங்கள் சேர்க்கப்படுவதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாது.

01 பக்க இல. 7 A இல் 7.5. (உ) பந்தி பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

7.5 (உ).

(i) ஏதேனுமொரு பதவிக்கு திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நிலையின் கீழ் பயிற்றுவிப்புத் தரத்துக்கு உள்வாங்கப்படும் விண்ணப்பதாரிகளது பயிற்சிக் காலத்தில், குறித்த அமைச்சின் / திணைக்களத்தின் தேவைப்பாட்டுக்கு இணங்க காலோசிதமான மாற்றங்கள் இடம்பெற வேண்டுமெனின், அதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்று உரிய பயிற்சிக் காலத்தினை அவ்வந்த ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உட்படுத்துவதற்கு ஏற்புடைய நியமன அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் ;

(ii) எவ்வாறு இருந்த போதிலும், தற்போது விசேட காரணங்களின் அடிப்படையில் பயிற்சிக் காலம் ஒரு வருடத்துக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் பதவிகள் தொடர்பாக தவிர, அனுமதியளிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு ஏற்ப, இரண்டு வருடங்கள் அல்லது அதனை விட அதிகமான பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக மேலே 7.5 (உ) (i) ஆம் பிரிவு ஏற்புடையதன்று.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2016, நவெம்பர் 22.

12- 577



இவ்வர்த்தமானிகளை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.